# குறள் சுட்டும் நன்னெறிகளும் இக்காலச் சட்ட நெறிகளும்

OPEN ACCESS

Volume: 13

Special Issue: 5

Month: March

Year: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

Citation:
*மோகன்தாசு, ப. குறள் சுட்டும் நன்னெறிகளும் இக்காலச் சட்ட நெறிகளும். Shanlax International Journal of Arts Science and Humanities*, Vol. 13, no. S1, 2026, pp. 98-05.

*Corresponding Author:
bmdoss_b@yahoo.com

DOI:
https://doi.org/10.34293/sijash.v13iS5-Mar.11099

***ப. மோகன்தாசு***
வழக்குறிஞர் மற்றும் தொழிலாளர் சட்ட வல்லுநர்
புதுச்சேரி

**ஆய்வுச்சுருக்கம்**
*திருக்குறள் வழங்கும் அறநெறிகள், நீதித்துறையின் செயல்பாட்டில் முக்கியமான வழிகாட்டுதல்களாக விளங்குகின்றன. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி* (Kural *118) நீதித்துறையில் நடுநிலைத்தன்மையை வலியுறுத்துகிறது. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு (*Kural *129) சொற்பயன்பாட்டின் ஒழுக்கநெறியை எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய குறட்பாக்கள் சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்புகளில் மேற்கோள்காட்டப்பட்டுள்ளன (*S. Palani v. Bajaj Textiles, *1999). மேலும், உயிர் பாதுகாப்பு, சமூக நீதி, சுற்றுச்சூழல், தண்டனை அளவுரு போன்ற பல துறைகளில் திருக்குறள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இடையிலான ஒத்திசைவு இவ்வாய்வில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *அரசியலமைப்புச் சட்ட நெறிமுறை, நல்லெண்ணக் கோட்பாடு, நீதித்துறை விளக்கம், திருக்குறள், சட்டமும் இலக்கியமும்.*

**அறிமுகம்**

திருக்குறள் உலகின் தலைசிறந்த நெறிமுறை நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அறம், பொருள், இன்பம் என மனித வாழ்வின் அனைத்து பரிமாணங்களையும் உள்ளடக்கிய இந்நூல், சட்ட மற்றும் நீதித்துறையின் அடிப்படை கோட்பாடுகளோடு தொடர்புடையது (Valluvar, ca. 1st Century BCE). சட்டமும் இலக்கியமும் மனித சமூகத்தை நன்னெறிப்படுத்தும் பொதுவான நோக்கத்தைக் கொண்டவை. இவ்வாய்வு, திருக்குறள் நெறிகள் மற்றும் இக்கால சட்ட நெறிகளுக்கிடையிலான தொடர்பை விளக்குகிறது. முன்னைய ஆய்வுகள், திருக்குறளின் அறநெறிகள் இயற்கை நீதி (Natural Justice), சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் போன்ற சட்டக் கோட்பாடுகளோடு தொடர்புடையவை எனக் காட்டுகின்றன (ஓணூடிண்டணச்ண, 2010). சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்புகளில் திருக்குறள் மேற்கோள்கள் இடம்பெற்றுள்ளன (AIR 1993 Mad 282; SCC 2011).

**முறையியல்**

இந்த ஆய்வு Doctrinal Legal Research Method அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது:

1. நீதிமன்ற தீர்ப்புகள் (Case Laws)
2. திருக்குறள் குறட்பாக்கள்

3. சட்ட விதிகளுடன் ஒப்பாய்வு
4. ஒப்பாய்வு (Analysis and Discussion)

**நடுவுநிலைமை அடக்கம் உடைமை**

நடுவுநிலைமை என்னும் அறநெறியை வலியுறுத்தும் வகையில், திருக்குறள் குறள் எண் 118 இவ்வாறு கூறுகிறது:

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து**
**ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி**

இக்குறள், மக்களிடையே பாரபட்சமின்றி சமநிலையுடன் நடந்து கொள்வது சான்றோரின் சிறந்த பண்பாகும் என்பதை உணர்த்துகிறது. இதே கோட்பாடு சட்டம் மற்றும் நீதித்துறையிலும் பிரதிபலிக்கிறது. குறிப்பாக, இயற்கை நீதிக் கோட்பாட்டின் அடிப்படையில், தீர்ப்பளிக்கும் போது நீதிமன்றம் எந்த ஒரு சாராருக்கும் சாதகமாக இருக்காமல் நடுநிலையுடன் செயல்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. அதேபோல், அடக்கம் உடைமை என்னும் அறநெறியை விளக்கும் வகையில், குறள் எண் 129 பின்வருமாறு கூறுகிறது:

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு**

இக்குறள், உடலுக்கு ஏற்பட்ட காயம் காலப்போக்கில் ஆறிவிடலாம்; ஆனால் கடுஞ்சொற்களால் உண்டாகும் மனவுணர்ச்சி காயம் ஆறாதது என்பதை வலியுறுத்துகிறது. இந்நெறியை ஒட்டியவாறு, S. Palani vs Bajaraj Textiles[1] வழக்கில், தொழிற்சாலையின் மேலதிகாரி ஒருவரை கடுஞ்சொற்களால் திட்டிய தொழிலாளியின் செயலுக்கு எதிராக, Madras High Court மேற்கண்ட குறளை மேற்கோளாகக் கொண்டு, அந்த தொழிலாளியை பணிநீக்கம் செய்தது நியாயமான தண்டனை எனத் தீர்ப்பளித்தது.

**அருள் உடைமை**

அருள் உடைமை என்னும் அறநெறியை வலியுறுத்தும் வகையில், திருவள்ளுவர் அவர்கள் திருக்குறள் குறட்பா 244-ல் பின்வருமாறு கூறுகிறார்:

**மன்னுயிர் ஓம்பி அருள்வார்க்கு இல்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை**

இக்குறள், அனைத்து உயிர்களையும் காக்கும் கருணைமிக்க மனப்பான்மையுடன் வாழ்பவர்களுக்கு, தமக்கே தீங்கு விளைவிக்கும் செயல் எதுவும் நிகழாது என்பதைக் குறிக்கிறது. அதாவது, அருள் என்பது மனித வாழ்வின் உயர்ந்த நீதிநெறி என வள்ளுவர் வலியுறுத்துகிறார். இத்தகைய அறநெறி, இந்திய சட்ட அமைப்பிலும் பிரதிபலிக்கிறது. குறிப்பாக, Constitution of India & Cß PmhøÍ 51A (g) (அடிப்படைக் கடமைகள்) படி, அனைத்து குடிமக்களும் அனைத்து உயிரினங்களுடனும் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டியது கடமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**புலால் மறுத்தல்**

புலால் மறுத்தல் என்னும் அறநெறியை வலியுறுத்தும் வகையில், திருக்குறள் குறட்பா 260 இவ்வாறு கூறுகிறது:

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்**

இக்குறள், உயிர்களை கொல்லாமலும், புலாலைத் தவிர்த்தும் வாழும் மனிதனை எல்லா உயிரினங்களும் போற்றும் என்பதைக் குறிப்பதாகும். இந்நெறியை ஒட்டியவாறு, Jaikopal Garodia

Foundation vs Srinivasan வழக்கில்[2], பக்தர்கள் ஆலயங்களுக்கு நன்கொடையாக வழங்கும் பசுக்களைப் பாதுகாப்பது தொடர்பான பிரச்சினை எழுந்தது. இந்த வழக்கை விசாரித்த Madras High Court, Prevention of Cruelty to Animals Act 1960 சட்டத்தின் கீழ் சில வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கும் போது, மேற்கண்ட திருக்குறளை ஆதாரமாகக் குறிப்பிட்டுள்ளது.

**கொல்லாமை**

கொல்லாமை என்னும் அறநெறியை வலியுறுத்தும் வகையில், திருக்குறள் குறட்பா 327 இவ்வாறு கூறுகிறது:

**தன் உயிர் நீப்பினும் செய்யற்க;**
**தான்பிறிது இன்னுயிர் நீக்கும் வினை**

இக்குறள், தன் உயிரையே இழக்க நேர்ந்தாலும், பிற உயிரைக் கொல்லும் செயலை மேற்கொள்ளக் கூடாது என்ற உயர்ந்த அறநெறியை எடுத்துரைக்கிறது. இந்நெறியை ஒட்டியவாறு, V. Krishnan vs G. Rajan Alias Madippurajan வழக்கில்[3], மனுதாரர் தனது மகளின் கருக்கலைப்பிற்கு அனுமதி கோரினார். இந்த வழக்கை விசாரித்த Madras High Court, மேற்கண்ட குறளை மேற்கோளாகக் கொண்டு, உயிர் பாதுகாப்பு என்ற அடிப்படை அறநெறியை வலியுறுத்தி, மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்தது.

**கல்வி**

கல்வி குறித்த திருவள்ளுவர் அவர்களின் அறநெறி, கற்கத்தகுந்த நூல்களை குற்றமறக் கற்று, பின்னர் அதற்கேற்ற வாழ்க்கை நெறியில் நிலைநிற்றல் வேண்டும் என்பதைக் கூறுகிறது. இத்தகைய நோக்கத்தை ஒட்டியவாறு, Registrar University of Madras vs Union of India வழக்கில்[4], கல்வி கற்பதற்கு இணிணsumer Protection Act 1986 பொருந்துமா என்ற கேள்வி எழுந்தது.இந்த வழக்கை விசாரித்த Madras High Court, கல்வி என்பது வாணிபப் பொருளாகக் கருதப்பட முடியாது என்பதை வலியுறுத்தும் போது, திருக்குறள் குறட்பா 391-ஐ மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ளது.

**கள் உண்ணாமை**

கள் உண்ணாமை என்னும் நெறியை வலியுறுத்தும் வகையில், மதுபானக் கடைகளில் மது விற்பனைக்கு உரிமம் வழங்குவதில் கட்டுப்பாடுகளை விதித்த தமிழ்நாடு அரசின் ஆணையைச் சுட்டிக்காட்டிய A.J. Joy vs State of Tamil Nadu வழக்கில், Madras High Court பின்வரும் திருக்குறளை மேற்கோளாக எடுத்துக்காட்டியுள்ளது[5]:

**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்;**
**என்மற்றுச் சான்றோர் முகத்துக் களி?**

இந்தக் குறள், மது அருந்துதல் தாயின் முன்பிலும் கூட துன்பம் தரக்கூடியதெனில், சான்றோரின் முன்னிலையில் அது இன்னும் வெறுக்கத்தக்கதாக அமையும் என்பதை உணர்த்துகிறது. இதன் மூலம், சமூக நலன் மற்றும் ஒழுக்க நெறியை பாதுகாப்பதற்கான அரசின் நடவடிக்கைகள் நியாயமானவை என நீதிமன்றம் மறைமுகமாக வலியுறுத்துகிறது.

**கொடுங்கோலாட்சி தவிர்க்கப்படுதல் - திருக்குறள் மற்றும் நீதித்துறை**

திருக்குறள் நூலில், திருவள்ளுவர் அரசாட்சி பற்றிய உயர்ந்த நெறிமுறைகளை எடுத்துரைக்கிறார். குறிப்பாக கொடுங்கோன்மை அதிகாரத்தில், அரசன் கொடுங்கோலனாக ஆட்சி செய்வதன் தீமைகளை அவர் கடுமையாக விமர்சிக்கிறார்.

**நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும்** **(குறள் 553)**

இந்தக் குறள், ஒரு அரசன் தினமும் நிர்வாகத்தை ஆய்வு செய்து, நீதிமுறையுடன் ஆட்சி செய்யா விட்டால், நாடு நாளுக்கு நாள் வீழ்ச்சியடையும் என்பதை வலியுறுத்துகிறது. இந்தச் சிந்தனை, இந்திய நீதித்துறையிலும் பிரதிபலித்துள்ளது. குறிப்பாக Palani Hills Preservation Council vs State of Tamil Nadu[6] என்ற வழக்கில், பழனிமலைப் பாதுகாப்பு சங்கம், கொடைக்கானலில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட "Pleasant Stay" ஓட்டலை இடிக்க கோரி மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கில், அரசு விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு பின்னர் அனுமதி அளித்தது சட்டபூர்வமல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், நீதிமன்றம் தனது தீர்ப்பில் திருக்குறள் 553-ஐ மேற்கோள் காட்டி, நிர்வாகம் முறையாக கண்காணிக்கப்படாதபோது அது சமூகத்திற்கே தீங்கு விளைவிக்கும் என்பதை வலியுறுத்தியது.

## குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை வழங்குதல் (Doctrine of Proportionality)

திருக்குறள் வலியுறுத்தும் அறநெறிகளின் படி, குற்றத்திற்குத் தகுந்த அளவிலேயே தண்டனை வழங்கப்பட வேண்டும். குறள் 562, கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம் நீங்காமை வேண்டு பவர் என, தண்டனை அளவில் அளவுகோலைக் கடைப்பிடிக்க வேண்டியதைக் குறிப்பிடுகிறது. அதேபோல், குறள் 567, கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம் என, தண்டனை வழங்கும்போதும் கடுஞ்சொல்லைத் தவிர்த்து மனிதநேய அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துகிறது. இத்தகைய கோட்பாடுகள் நவீன சட்டவியலில் Proportionality மற்றும் Natural Justice எனும் அடிப்படைக் கருத்துகளோடு ஒத்திசைவாக உள்ளன. இதனை Scooter India Ltd. v. Labour Court, Lucknow[7] வழக்கு தெளிவுபடுத்துகிறது. இவ்வழக்கில், தொழிலாளி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், அவருக்கு உரிய விசாரணை வாய்ப்பு வழங்கப் பட்டதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இருப்பினும், தண்டனையின் கடுமை அளவுக்கு மீறியதாகக் கருதப்பட்டதால், திருத்த வாய்ப்பு வழங்கும் நோக்கில் மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்ற தொழிலாளர் நீதிமன்ற உத்தரவை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியது. இதனால், குற்றத்திற்கேற்ப தண்டனை வழங்குதல், மனிதநேயத்துடன் கருணையைக் கலந்து அணுகுதல், மற்றும் திருத்த வாய்ப்பை உறுதி செய்தல் ஆகியவை திருக்குறளிலும் நவீன சட்டத்திலும் பொதுவான கோட்பாடு களாக விளங்குகின்றன என்பது தெளிவாகிறது.

## போர் தொடர்பான நாட்டிடைச் சட்டக் கோட்பாடுகள் (International Humanitarian Law)

நாட்டிடைச் சட்டத்தில், குறிப்பாக Geneva Conventions (1949) முக்கிய இடம் பெறுகின்றன. இவ்வுடன்படிக்கையின் அடிப்படைக் கோட்பாடுகளின் படி, வரையறையற்ற மற்றும் தான்தோன்றித் தாக்குதல்கள் (indiscriminate attacks) தவிர்க்கப்பட வேண்டும்; மேலும், பொதுமக்கள் மற்றும் பலவீனமானவர்களைப் பாதுகாப்பது அவசியமாகக் கருதப்படுகிறது. இத்தகைய அறப்போர் (Just War) நெறிகள் திருக்குறள்-இலும் முன்கூட்டியே வலியுறுத்தப்பட்டுள்ளன. குறள் 773-ன் படி, பகைவரிடம் வீரத்துடன் போராடினாலும், அவர்கள் தாழ்வுற்றபோது இரக்கத்துடன் உதவுதல் உண்மையான ஆண்மையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அதேபோல், குறள் 861 சம வலிமையுடையவர்களுடனேயே போரிடுதல் நியாயமானது என்றும், பலவீனர்களைத் தாக்குதல் அறமல்ல என்றும் வலியுறுத்துகிறது. மேலும், குறள் 995 பகைவரிடத்தும் பண்புடன் நடந்து கொள்வதே உண்மையான புகழாகும் எனக் குறிப்பிடுகிறது. இதனால், மனிதாபிமான அடிப்படையிலான போர் நெறிமுறைகள்-பொதுமக்கள் பாதுகாப்பு, அளவான வலிமை பயன்படுத்தல் (proportionality), மற்றும் இரக்கநெறி-இவை அனைத்தும் திருக்குறளில் முன்னரே வலியுறுத்தப்பட்டுள்ளன என்பதும், அவை நவீன நாட்டிடைச் சட்டக் கோட்பாடுகளுடன் ஒத்திசைவாக உள்ளன என்பதும் தெளிவாகிறது.

**ஆட்சி முறை தொடர்பான கோட்பாடுகள் (Governance Principles)**

குடியரசு ஆட்சிமுறையில் Rule of Law அடிப்படையில், மக்கள் அனைவரையும் பாகுபாடின்றிக் காக்க வேண்டியது அரசின் முதன்மைக் கடமையாகும். இக்கருத்தை இந்திய உச்சநீதிமன்றம் Noida Entrepreneurs Association v. Noida வழக்கில் வலியுறுத்தியுள்ளது[8]. இதனுடன் ஒத்துப் போகும் வகையில், திருக்குறள்-இல் குறள் 244, மன்னுயிர் ஓம்பி அருள்வார்க்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை என அனைத்து உயிர்களையும் காக்கும் கருணைமிக்க ஆட்சியை வலியுறுத்துகிறது; அதேபோல், குறள் 322 உயிர் பாதுகாப்பைச் சிறந்த அறமாகக் குறிப்பிடுகிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் (Constitution of India) பிரிவு 14 (சமத்துவ உரிமை), பிரிவு 21 (வாழ்வுரிமை) மற்றும் பிரிவு 38 (சமூக, பொருளாதார, அரசியல் நீதி) ஆகியவற்றின் மூலம், நியாயமான மற்றும் சமநிலை கொண்ட ஆட்சியை உறுதி செய்கிறது. இதே கருத்து திருவள்ளுவரின் இறைமாட்சி குறள்களில் பிரதிபலிக்கிறது: குறள் 387-390 அரசன் இனிய சொல், நீதி, பொறுமை, அருள் ஆகிய பண்புகளுடன் குடிமக்களை காக்க வேண்டும் எனக் கூறுகின்றன; மேலும், குறள் 544 மற்றும் 547 செங்கோன்மை (just governance) நிலைத்த சமூக ஒழுங்கிற்கான அடித்தளமாக விளங்குகிறது என விளக்குகின்றன. இதனால், திருக்குறளில் வலியுறுத்தப்பட்ட ஆட்சி நெறிமுறைகள், இக்கால அரசியல் மற்றும் சட்ட அமைப்புகளில் காணப்படும் நீதிமுறை ஆட்சி (Just Governance) மற்றும் சமூக நலன் (Welfare State) போன்ற கோட்பாடுகளுக்கு தத்துவ அடிப்படையாக அமைகின்றன என்பது தெளிவாகிறது.

**குணமும் குற்றமும் ஆய்வு செய்தல் (Assessment of Good Conduct and Misconduct)**

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் (குறள் எண் 504)

இவ்வாறு கூறுகிறது. இந்தக் குறள், ஒருவரின் நல்ல குணங்களையும் குற்றங்களையும் முழுமையாக ஆய்வு செய்து, எது அதிகமோ அதனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்க வேண்டும் என்ற நெறியை முன்வைக்கிறது. இது சமநிலை, நியாயம் மற்றும் பரிசீலனை ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு நெறிமுறை அணுகுமுறையாகும். சட்டவியலில், குறிப்பாக தண்டனை நிர்ணயிக்கும் (sentencing) கட்டத்தில், இத்தகைய அணுகுமுறை முக்கிய பங்கு வகிக்கிறது. தொழிலாளர் சட்டங்களில், ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்ட தொழிலாளிக்கு தண்டனை வழங்கும் முன், அவரது முந்தைய பணிச்சரிதை, ஒழுக்கநிலை மற்றும் செயல்திறன் ஆகியவை மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதன் மூலம், நல்ல பணித்திறன் இருந்தால் தண்டனை தளர்த்தப்படுவதும், கடுமையான குற்றச்செயல் இருந்தால் தண்டனை அதிகரிக்கப்படுவதும் நடைமுறையில் காணப்படுகிறது. இந்தக் கோட்பாடு Engine Valves Ltd. v. Labour Court, Madras வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தால் விரிவாகப் பரி சீலிக்கப்பட்டு, தண்டனை அளவுருவில் சமநிலை மற்றும் நியாயம் கடைபிடிக்கப்பட வேண்டியது வலியுறுத்தப்பட்டுள்ளது9. இதனால், திருக்குறளில் கூறப்படும் வாழ்வியல் நெறி, இக்கால சட்ட நடைமுறைகளில் செயல்பாட்டு கோட்பாடாகத் திகழ்கிறது என்பது தெளிவாகிறது.

**சுற்றுச் சூழல் கோட்பாடுகள் (Principles Relating To Environmental Protection)**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் Constitution of India Article 51A(g) படி, குடிமக்கள் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதும் உயிரினங்களிடம் இரக்கம் காட்டுவதும் அடிப்படை கடமையாகும். இதனை வலுப்படுத்தும் வகையில், State of Madhya Pradesh v. Kedia Leather and Liquor Ltd. வழக்கில், சுற்றுச்சூழல் மாசுபாடு வாழ்வுரிமையை பாதிக்கும் என்றும், சுகாதார உரிமை அதனுடன் இணைந்ததாகும் என்றும் உச்சநீதிமன்றம் விளக்கியுள்ளது[10]. இக்கோட்பாடுகளுக்கான முன்னோடியாக Tirukkural திகழ்கிறது.

***நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்***
***வான்இன்று அமையாது ஒழுக்கு*** ***(குறள் 20).***

இந்தக் குறள், நீர் மற்றும் இயற்கைச் சமநிலையின் அவசியத்தை வலியுறுத்துகிறது. மேலும், குறள் 271, 452, 1040 ஆகியவை மனிதன்-சூழல் தொடர்பை விளக்குகின்றன. எனவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்த வளர்ச்சி போன்ற நவீன சட்டக் கோட்பாடுகள், திருக்குறளில் முன்கூட்டியே வலியுறுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

### நல்லெண்ணம் (Good Faith Principle)

***ஒப்புரவின் ஆல்வரும் கேடுஎனின் அஃதொருவன்***
***விற்றுக்கோள் தக்கது உடைத்து.***

திருக்குறள் எண் 220-இவ்வாறு கூறுகிறது. பிறருக்கான நன்மையை நோக்கமாகக் கொண்டு (ஒப்புரவு / நல்லெண்ணம்) செய்யப்பட்ட செயலில் ஏற்படும் கேடு, குற்றமாகக் கருதப்படக் கூடாது என்ற உயர்ந்த நெறியை வலியுறுத்துகிறது. இதன் மையக் கருத்து நல்லெண்ணம் (Good Faith) ஆகும். இதே கோட்பாடு Indian Penal Code 1860 சட்டத்திலும் வெளிப்படையாக பிரதிபலிக்கிறது. குறிப்பாக, பிரிவு 93 (Section 93) படி, ஒருவரின் நன்மைக்காக நல்லெண்ணத்தில் வழங்கப்படும் தகவல்- even if it results in harm - குற்றமாகக் கருதப்படாது. இந்த ஒப்பீடு, திருக்குறளில் முன்வைக்கப்பட்ட வாழ்வியல் நெறி மற்றும் நவீன குற்றவியல் சட்டக் கோட்பாடு ஆகியவற்றுக்கிடையிலான ஆழமான ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. நீதித்துறையில் mens rea (உள்ளுணர்வு / நோக்கம்) முக்கியமானதாகக் கருதப்படும் நிலையில், குறள் 220 முன்னரே நோக்கத்தின் சுத்தத்தையே தீர்ப்பின் அடிப்படையாகக் கருதுகிறது. எனவே, ஒப்புரவால் (good faith) நிகழும் செயலில் ஏற்பட்ட பாதிப்பு, குற்றவியல் பொறுப்பாக மதிக்கப்பட வேண்டாம் என்ற அடிப்படைச் சிந்தனை, திருக்குறளிலும் இந்திய சட்டத்திலும் ஒரே கோட்டில் நிலைபெற்றுள்ளது என்பது தெளிவாகிறது.

### சமூக நீதி (Social Justice)

தமிழக அரசு மீது தாக்கல் செய்யப்பட்ட National South Indian Rivers Interlinking Farmers Association v. State of Tamil Nadu வழக்கில், வறட்சியால் விவசாயிகள் சந்தித்த தீவிர பாதிப்புகள் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன[11]. மழை பற்றாக்குறையால் பயிர்கள் சேதமடைந்து, விவசாயிகள் ஈடுசெய்ய முடியாத பொருளாதார இழப்புகளை சந்தித்த நிலையில், அனைத்து விவசாயிகளின் பயிர்க் கடன்களையும் ரத்து செய்ய உத்தரவு வழங்குமாறு கோரப்பட்டது. இவ்வழக்கை சமூக நீதி (Social Justice) என்ற அடிப்படைக் கோட்பாட்டின் வெளிச்சத்தில் பரிசீலித்த சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசின் கடன் தள்ளுபடி அரசாணையில் இடம்பெற்றிருந்த 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்து ள்ள விவசாயிகள் தகுதியற்றவர்கள் என்ற வரம்பை சட்டத்திற்கு புறம்பானதாக அறிவித்தது. மேலும், அனைத்து விவசாயிகளுக்கும் சமமான நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனத் தெளிவுபடுத்தி, பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்ய தமிழக அரசு உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பிற்கு நெறிமுறை வலிமை அளிக்கும் வகையில், நீதிமன்றம் திருக்குறள் "உழவு" அதிகாரத்தில் உள்ள குறள் 1035-ஐ மேற்கோள் காட்டியது:

***இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது***
***கைசெய்தூண் மாலை யவர்*** ***(குறள் 1035).***

இக்குறள், உழவர்களின் உயர்ந்த சமூகப் பங்களிப்பையும், அவர்கள் பிறருக்கு ஆதாரமாக இருப்பதையும் எடுத்துக்காட்டுகிறது. இதனை மேற்கோள்காட்டிய நீதிமன்றம், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பது சமூக நீதி மற்றும் அரசின் பொறுப்பு என்ற நிலைப்பாட்டை

வலியுறுத்தியது. இதன் மூலம், திருக்குறள் நெறிகளும் இக்கால சட்டக் கோட்பாடுகளும்-குறிப்பாக சமூக நீதி, சமத்துவம் மற்றும் நலவாழ்வு-ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன என்பது தெளிவாகிறது.

## முடிவுரை

Rajaratnam v. State of Tamil Nadu வழக்கில் ***26.04.2016*** அன்று சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய முக்கியத் தீர்ப்பு, திருக்குறளின் சமூக மற்றும் கல்வி முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வரலாற்றுச் சான்றாக திகழ்கிறது[12]. அந்தத் தீர்ப்பில், திருக்குறளை முழுமையாகக் கற்றறிதல் இளைய தலைமுறையின் வாழ்வியல் செழுமையை மேம்படுத்தும் எனக் குறிப்பிட்டு, அறத்துப்பாலும் பொருட்பாலும் சார்ந்த அதிகாரங்களை பள்ளிக் கல்வியில் இணைக்க வேண்டும் என்று அரசுக்கு வழிகாட்டப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றக் கருத்து, இலக்கியமும் சட்டமும் பரஸ்பரம் தொடர்புடையவை என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, பள்ளிக் கல்வியில் திருக்குறள் நெறிகள் இணைக்கப்படும் போது, சட்டக் கல்வி பயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் வழக்குரைஞர்களாகவும் நீதியரசர்களாகவும் பணிபுரியும் நிலையில், இலக்கிய அறநெறிகளையும் சட்டக் கோட்பாடுகளையும் ஒருங்கிணைத்து வாதிடும் திறனைப் பெறுவர். மேலும், இத்தகைய ஒருங்கிணைவு, சட்டத்தின் letter of law ©ØÖ® spirit of law ஆகிய இரண்டையும் சமநிலையுடன் செயல்படுத்த உதவும். திருக்குறளின் நன்னெறிகள்-நடுநிலைமை, கருணை, நீதிச் சிந்தனை, பொறுப்பு ஆகியவை-நீதித்துறையின் செயல்பாட்டில் உயிரோட்டமூட்டும் ஒழுக்க அடித்தளமாக விளங்குகின்றன. எனவே, திருக்குறள் ஒரு இலக்கியப் படைப்பாக மட்டுமல்லாது, இக்கால சட்ட அமைப்புகளுக்கான நெறிமுறை வழிகாட்டி (ethical jurisprudential framework) ஆகவும் திகழ்கிறது. நீதியரசர்களின் வழிகாட்டுதலுடனும் கல்வி அமைப்பின் ஆதரவுடனும், திருக்குறளின் கோட்பாடுகள் எதிர்கால நீதிப் பரிபாலனத்தில் மேலும் வலுப்பெறும் என்பது நிச்சயம்.

## நன்றி

***2025*** ஆம் ஆண்டு நவம்பர் ***8***-அன்று Sejong University, தென்கொரியாவில் நடைபெற்ற முதல் உலகளாவிய திருக்குறள் மாநாடு (ITCSK ***2025***) நிகழ்வில் இக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாய்வு கட்டுரையை உருவாக்க வழிகாட்டியும் ஊக்கமளித்தும் துணைநின்ற தென்கொரியா தமிழ் ஆராய்ச்சி அமைப்பின் (SKTRA) தலைவர் முனைவர் Selvaraj Arokiyaraj அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இம்மாநாட்டில் பங்கேற்கவும் இக்கட்டுரையை சமர்ப்பிக்கவும் வாய்ப்பு வழங்கிய துணைத்தலைவர் சகாயம் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். அதேபோல், செயலாளர் ஞானராஜ் அவர்களுக்கும் என் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## References

1. S. Palani v. Bajaj Textiles, Labour Law Notes, Vol. 1, 1999, p. 832.
2. Jayagopal Karodia Foundation v. Srinivasan, Criminal Law Journal, Vol. 110, 2004, p. 2420.
3. V. Krishnan v. G. Rajan, Madras Law Journal, Vol. 1, 1994, p. 731.
4. Registrar, University of Madras v. Union of India, Madras Law Journal, Vol. 2, 1995, p. 1367.
5. A.J. Joy v. State of Tamil Nadu, All India Reporter (Madras), 1993, p. 282.
6. Palani Hills Protection Council v. State of Tamil Nadu, Writ Law Reporter, 1995, p. 737.
7. Scooter India Ltd. v. Labour Court, Lucknow, Labour Law Journal, Vol. 4, 2009, p. 411.
8. Noida Entrepreneurs Association v. Noida, Supreme Court Cases, Vol. 6, 2011, p. 508.

9. Engine Valves Ltd. v. Labour Court, Chennai, Labour Law Notes, Part 1, 1991, p. 268.
10. State of Madhya Pradesh v. Kedia Leather Liquor Ltd., Supreme Court Cases, Vol. 7, 2003, p. 389.
11. National South Indian Rivers Interlinking Farmers Association v. State of Tamil Nadu, Madras Law Journal, Vol. 4, 2017, p. 544.
12. Rajarathinam v. State of Tamil Nadu, Indian Kanoon Reports, 2016.